பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 16 வெள்ளிக்கிழமை 29.01.2021 கதிர் 316


## மனைவியைக் கொலைசெய்துவிட்டு பொலிஸில் சரணடைந்தார் கணவன்

ஹற்றன், கினிகத்தேன பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அம்பகமுவ - மாபத பகுதியில் இளம் குடும்பப் பெண் கூரிய ஆயுதத்தால் தாக்கப் பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான மாலிகா பிரியதர்ஷினி என்பவரே, அவரின் கணவரால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார்

2

# மாகாணப் பாடசாலைகளை மத்தி கையகப்படுத்த முயற்சி!



## அதிகாரப் பகிர்வுக்கு முரணான செயல் இது சி.வி.கே. சிவஞானம் ஆளுநருக்குக் கடிதம்

**மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் என்று தரமுயர்த்துவதாகக் கூறி அவற்றை மத்திய அரசு கையகப் படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும் என வட மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு எடுத்துரைத்துள்ளார்.**

2



## எக்னலிகொட தொடர்பில் நீதி கோரிப் போராட்டம்!

### மட்டக்களப்பில் இன்று



கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொடவுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊடக அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பு இன்று காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது.

2

## யாழ்ப்பாணத்துக்கு வந்தன கொரோனாத் தடுப்பூசிகள்!

### போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட சுகாதாரத்துறையினருக்குக் கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை

2

## கொரோனாத் தொற்றிலிருந்து இதுவரை 55,398 பேர் மீண்டனர்

நாட்டில் இன்று மேலும் 963 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 398 ஆக உயர்வடைந்துள்ளது.

2

## தடுப்பூசி குறித்து அச்சம் வேண்டாம்!

### வைத்தியர் உறுதியுரை



தடுப்பூசி குறித்து எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என தேசிய தொற்று நோய்களுக்கான நிறுவனத்தின் மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

2

## தனியார் பஸ் தடம் புறழ்வு 13 பேருக்குப் படுகாயம்!

### புனாணையில் காலை சம்பவம்



மட்டக்களப்பு பிரதான வீதி புனாணையில் இடம்பெற்றபஸ்விபத்தில், 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவையில் இருந்து கல்முனை

2

### சுமந்திரன், கஜேந்திரன் வலியுறுத்தியும்

## 'பௌத்த விகாரை' என்ற சொல்லை அறிக்கையிட மறுத்தார் அங்கஜன்!

### வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்பவம்

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்பட்ட மற்றும் படாத இடங்களில் பௌத்த விகாரைகள் உருவாக்கப்படுகின்றன. அனுமதியற்ற பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றமையைக் கண்டித்து, 'பௌத்த விகாரைகள்' உருவாக்கப் படும்போது அனுமதிபெறவேண்டும் என்று வலியுறுத்தி ஒருதீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், செ.கஜேந்திரன் ஆகியோரால் வலியுறுத்தப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு, வலி.வடக்கு

2

## யானைத் தந்தங்களுடன் முல்லையில் இருவர் கைது



முல்லைத்தீவு மாவட்டம் களிக்காட்டுப் பகுதியில் சில நாள்களுக்குமுன்னர் உயிரிழந்த நிலையில் காணப்பட்ட யானையைச் சுட்டுக்கொன்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளமையுடன் யானைத் தந்தங்கள் இரண்டு மற்றும் நாட்டுத் துப்பாக்கி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

உயிரிழந்த நிலையில் மிகப் பெரிய தோற்றம் கொண்ட யானை ஒன்றின் சடலம் காட்டுப் பகுதியில் காணப்பட்டுள்ளது. உயிரிழந்து பல நாள்ளாக இருக்கலாம் என்று கருதப்பட்ட அந்த யானையின் தலை பகுதியில் காயங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2

## பாரிய விபத்தைத் தடுத்து நிறுத்திய இராணுவத்தின் துணிகர செயற்பாடு!

### யாழ். எழுதுமட்டுவாழில் சம்பவம்



யாழ்ப்பாணம் - எழுதுமட்டுவாழ் ஆசைஸ்ரீபிள்ளை ஏற்றம் பகுதியில் ரயில் கடவையைக் கடப்பதற்கு கனரக வாகனம் ஒன்று முயன்றுள்ளது.

ரயில் சமிக்ஞை ஒலி, ஒளி போடப்பட்டிருந்த போதிலும் கூட அதனை பொருட்படுத்தாது கடவையை கடக்க முயன்ற போது கனரக வாகனம், செயலிழந்து நடு கடவையில் நின்றுள்ளது. அங்கிருந்த சில இளைஞர்கள் ரயில் நெருங்குவதற்கு முன்னர், வாகனத்தைக் கடவையை விட்டு தள்ள

2

## விலங்குக்கு வைத்த மின் கம்பியால் இரு குடும்பஸ்தர்கள் பலியாகினர்!

### திருக்கேதீஸ்வரத்தில் சோக சம்பவம்



மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு சற்று தொலைவில், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் இரண்டு சடலங்களை இன்று (வெள்ளிக்கிழமை) காலை மன்னார் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

அடம்பன் பள்ளிவாசல் பிட்டி பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மூக்கையா மகேந்திரன் (வயது - 45) மற்றும் வேட்டையார் முறிப்பு பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை தேவசங்கர் (வயது - 37) ஆகியோரே

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ‘பௌத்த விகாரை’ என்ற சொல்லை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி கோரிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தனாலும் மற்றும் பங்கொண்டவர்களால் அறிக்கையிட்டு தீர்மானமாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தப்பட்டது.

இதன்போது கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய அங்கஜன் இராமநாதன் -

‘பௌத்த விகாரை’ என்ற பதத்தை விடுத்து, சகல கட்டுமானங்களுக்கும் அனுமதி பெறவேண்டும் என்று அறிக்கையிடுவோம் என்று தெரிவித்தார்.

பதிலுக்குக் கருத்துரைத்த சுமந்திரன் எம்.பி. -

’பௌத்த விகாரை’ என்று பதிவிடுவதற்கு தாங்கள் ஏன் தயங்குகின்றீர்கள்? இங்கு கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களுமாகவே இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக முன்வைக்கின்றார்கள். தாங்கள் மட்டும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றீர்கள். - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த செல்வராஜா கஜேந்திரன் எம்.பி. -

ஒரு பௌத்த விகாரை எவருக்கும் தெரியாமல் விடுவிக்கப்படாத பிரதேசத்தில் உருவாக்கப்பட்டதன் பிற்பாடு அதை சட்ட விரோதம் என்று இடித்தழிப்பது கடினமான ஒரு விடயம். தாங்கள் குறிப்பிட்டமை போன்று இராணுவம் ஒரு கட்டத்தை உருவாக்கினால் அதை பின்னர், இடித்தழிக்கலாம். விகாரை சிங்கள மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயம். இராணுவம் அமைத்த கட்டடத்தை இடித்தால் சிங்கள மக்கள் எவரும் எந்தக் கேள்வியும் கேட்கமாட்டார்கள். ஆனால், விகாரைகளை இடித்தழிக்கும்போது தென்னிலங்கையில் அது மிகப்பெரும் கிளர்ச்சியாக மாறும். ஆகவே, உருவாக்கப்படுவதற்கு முன்னர் நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி அவதானமாகச் செயற்பட வேண்டும். - என்றார்.

ஆனால், எவருடைய கோரிக்கைகளையும் ஏற்கமறுத்த அங்கஜன், ‘கட்டங்கள்’ என்ற பொதுப் பதத்தை அறிக்கையில் பிரயோகிக்கும்படி கூறி அடுத்த விடயத்துக்கு நகர்ந்தார்.

## விலங்குக்கு வைத்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு அருகிலுள்ள மின் கம்பத்தில் இருந்து சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பை பெற்று, வீதிக்கு சற்று தொலைவில் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைத்திருந்த மின் இணைப்பில் சிக்கியே இருவரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இன்று காலை குறித்த இருவரும், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் காணப்பட்டமையை அவதானித்த பிரதேசவாசிகள், மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வருகைதந்து மின் இணைப்பைத’ துண்டித்ததன் பின்னரே சடலங்களை பொலிஸார் எடுத்துள்ளனர்..

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாரிய விபத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முற்பட்டும், முயற்சி பயனளிக்கவில்லை.

ரயில் நெருங்கி வருவதை அவதானித்த அந்த இளைஞர்கள், உடனே தமது மேலாடையை கழற்றி உயர்த்திக் காட்டி ரயிலை நிறுத்த கோரியுள்ளனர்.

ஆனாலும் அதிவேக ரயில் என்பதால் வேகத்தைக் கட்டுபடுத்த தாமதமானது. எனினும் அச்சமயம் அங்கு ஏ9 வீதி ஊடாக வருகை தந்த இராணுவத்தினர் உடனே சம்பவ இடத்திற்குப் பாய்ந்து சென்று, உயிரையும் துச்சமாக மதித்து, வாகனத்தை கடைசிக் கணத்தில் தள்ளி விலத்தி பாரிய சேதத்தில் இருந்து பாதுகாத்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் செயற்பாட்டுக்குப் பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

## தனியார் பஸ் தடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோக்கி போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ், இன்று (வெள்ளிக்கிழமை) காலை 6.30 மணிக்கு பயணிகளுடன் பயணித்துள்ளது. இதன்போது புனாணைப் பகுதியில் முன்னாள் சென்ற வாகனத்தை முந்தி செல்லமுற்பட்டபோது, வேக கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி, தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதில் பயணித்த 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எக்னலிகொட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உழைக்கும் ஊடக தொழிற்சங்க சம்மேளனம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளரகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, ‘காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும்?’, ‘சர்வதேசமே பதில்சொல்!’, ‘காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் எங்கே?’, ‘படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடு!’ போன்ற கோசங்களை எழுப்பி அவர்கள் நீதி கோரினர்.

## கொரோனாத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, 61 ஆயிரத்து 586 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதில் 5 ஆயிரத்து 891 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 720 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 297 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

## தடுப்பூசி குறித்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதல் மருத்துவ அதிகாரியாக, இந்திய கோவிட் தடுப்பூசி பெற்றுக்கொண்டமையை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தடுப்பூசி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஆராய்ச்சிகளையும் துல்லியமாக ஆய்வு செய்தமையைத் தொடர்ந்தே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது எனக் குறிப்பிட்ட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம, இந்த தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## யானைத் தந்தங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேவேளை அந்த யானையின் தந்தங்கள் இரண்டும் அறுத்து எடுக்கப்பட்டிருந்தன. இதனால் தந்தத்திற்காகவே அது கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸாரும், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில் இன்று குறித்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களிடம் இருந்து தந்தங்கள் இரண்டு, துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன. பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்துக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பிக்கப்படவுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை தொடக்கம் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இரண்டாயிரத்து 300 கொரோனாத்தடுப்பூசி மருந்துகள் கோரப்பட்டுள்ளன எனவும், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அதனை இன்று பெற்றுக்கொள்வோம் எனவும் அவர் கூறினார்.

இலண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா தடுப்பு மருந்து இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியின் 5 லட்சம் மருந்துகள் இந்தியாவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த தடுப்பூசி முதற்கட்டமாக சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு ஏற்றும் பணி இன்று மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனைவியைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தனர்.

குறித்த பெண்ணுக்கு மற்றுமொரு நபருடன் கள்ளத் தொடர்பு இருந்ததை அடிப்படையாக வைத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி மாலையே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் மறுநாள் 27ஆம் திகதி மாலை குறித்த பெண்ணின் கணவர், தாமாகவே முன்வந்து பொலிஸில் சரணமடைந்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், ஆரம்பகட்ட விசாரணையை மேற்கொண்டனர். நீதிவான் பரிசோதனையின் பின்னர் சடலம் நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாணப் பாடசாலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல என்றும் அவர் ஆளுநருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

‘யாழ்.மாவட்ட பாடசாலைகள் தேசியப் பாடசாலைகள் ஆக்கப்படுதல்’ இது தொடர்பில் வட.மாகாண ஆளுநருக்கு அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்து பிரதான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன எனவும், அவை வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் இருந்து மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுகின்றன எனவும், கடந்த வாரம் ஊடகச் செய்திகளின் மூலமாக அறிய வந்துள்ளது.

குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத அரச பாடசாலைகள் அரசமைப்பு ரீதியாக மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயம் என்ற ரீதியில் இந்தப் பத்துப் பாடசாலைகளும் இதுவரை மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தவையாகும். அவற்றை மத்திய அரசு கையகப்படுத்துவது அதிகாரப் பகிர்வுக்கு முரணானதாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட. மாகாண சபை இயங்கிய காலத்தில் இவ்வாறான முயற்சிகள் யாவும் இங்கே மறுதலிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

இந்த நிர்வாக அதிகார மாற்றத்தின் தர்க்கவியல் புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. அதாவது நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக இருப்பினும் அவை மாகாண சபையால் சீர்திருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வது ஒரு பிரச்சினை அல்ல.

அவற்றை விட, தேசியப் பாடசாலைகளுக்கு ஏதாவது மேலதிக வசதி, வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாயின் அவற்றை மாகாண நிர்வாகத்தின் மூலம் வழங்க முடியும். அவற்றுக்காக ஏற்கனவே நடைமுறையில் இருந்த மாகாண சபை அதிகாரத்தை பிடுங்கி மத்திக்குக் கொண்டு செல்லுதல் அதிகாரப்பகிர்வை முழுமையாக மீறும் செயற்பாடாகும்.

இந்தச் செயற்பாடு சமூகத்தில் தேசியப் பாடசாலைகள் ஏதோ தரமுயர்ந்தவை எனவும், ஏனையவை தரம் குறைந்தவை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி, தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல.

மேலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சபை இல்லாத சூழ்நிலையில் இவ்வாறு செய்வது ஜனநாயக விரோதமானது என்பதையும், இந்தச் செயற்பாடு நிறுத்தப்படவேண்டும் என்பதையும் எமது தீர்க்கமான வேண்டுகோளாகப் பதிவு செய்து கொள்கிறேன்.

தற்போது வடக்கு மாகாண சபையின் சட்டரீதியான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கின்றேன். - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பயனற்ற ஐக்கிய தேசியக் கட்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வினால் ஓரங்கட்டி ஒதுக்கப்பட்ட போதும் கட்சியை விட்டு விலக மாட்டேன் என்று அறிவித்திருக்கின்றார் அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்கா.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியைத் துறந்துள்ள அவர் கட்சியின் உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து செயற்படுவார் என்றும் அறிவித்திருக்கின்றார்.

ஏற்கனவே பொதுத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு, குட்டிச் சுவராகிப் போய்க் கிடக்கும் ஐ.தே.கட்சியில் பல பதவி மாற்றங்களை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்துள்ளார்.

வழமைபோல தமக்கு விருப்பமானவர்களை – நெருக்கமானவர்களை – எடுபிடிகளை – முக்கிய பதவி நிலைகளில் நியமிக்கின்றார் என்று அறிவித்த அவர், தவிர்க்க முடியாத நிலையில் கட்சி முக்கியஸ்தராக இருக்கும் நவீன் திஸாநாயக்காவுக்கும் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வழங்கினார்.

எனினும், அதை ஏற்பதற்கு நவீன் திஸநாயக்கா மறுத்து விட்டார்.

கட்சியின் பதவி நிலையில் மாற்றம் ஏற்படுத்தினால் மட்டும், கட்சி அமைந்துள்ள பின்னடைவைச் சீர் செய்து விட முடியாது, தலைமைத்துவம் தொடர்பாக அனைத்து மட்டப் பதவி நிலைகளும் கூட ஒரேயடியாக மாற்றப்பட வேண்டும் என்று அவர் போடு போட்டிருக்கின்றார்.

சஜித் பிரேமதாஸ போல நவீன் திஸநாயக்காவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் உரிமை – உரித்து – இருக்கின்றது.

சஜித்தின் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸா ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து நாட்டின் தலைவரான ஜனாதிபதி பதவி வரை வகித்தவர். அதே போன்று மகன் சஜித் பிரேமதாஸவும் நீண்ட காலம் கட்சியுடன் நின்றுழைத்தவர்.

அதே போன்ற உரித்து – இரட்டை உரித்து – நவீன் திஸநாயக்காவுக்கும் உண்டு. அவரின் தந்தையான காமினி திஸநாயக்காவும் கட்சியுடன் நீண்ட காலம் இயங்கியவர். கட்சியின் சார்பில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தவர். கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்ட சமயமே அவர் கொல்லப்பட்டார். அவரது அந்த வேட்பாளர் பொறுப்பைத் தொடர்ந்து வகித்தவர் காமினியின் துணைவியார் – நவீனின் தாயார் – ஸ்ரீமனி திஸநாயக்காவே. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட தாய் – தந்தையரின் மகன் நவீன் இளமைக் காலம் முதல் கட்சியுடனேயே தம்மைப் பொருத்திக் கொண்டவர். அவரது மனைவியின் தகப்பனார் கரு ஜயசூரிய, கட்சிக்குள் அதன் தலைவர் ரணிலுக்கு அடுத்து முன்னிலையில் இருந்தவர்.

அந்த வகையில் பார்த்தால் பிரேமதாஸவின் மகன் சஜித் போல, காமினி திஸாநாயக்காவின் மகன் நவீனுக்கும் கட்சிக்குள் அதிக உரித்தும் பாத்தியமும் உண்டு.

கட்சித் தலைமைத்துவத்துக்காய் போட்டியிட்ட சஜித் 'விடா கண்டன், கொடா கண்டன்' ஆக உடும்புப் பிடியில் நின்ற ரணிலுடன் தொடர்ந்து முட்டிமோத வகையில்லாத நிலையில் கட்சியை விட்டே வெளியேறி விட்டார். புதுத் தண்டவாளம் போட்டு, அதில் புதுக் கட்சியாக 'ஐக்கிய மக்கள் சக்தியை' ஸ்தாபித்து, அந்தப் புது ரயிலைச் செலுத்துகின்றார்.

ராஜபக்ஷக்களின் மொட்டுக் கட்சி அசுரபலத்துடன் அதிகாரத்துக்கு வந்தமையை அடுத்து மாற்றுக் கட்சி அல்லது பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்து சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிட்டியது.

அந்தப் பொதுத் தேர்தலோடு நன்றாக அடிபட்டுப்போனது ஐ.தே.கட்சி. மாவட்ட மட்டங்களில் அக் கட்சியிலிருந்து ஓர் எம்.பி. கூட தெரிவு செய்யப்படாத மோசமான பின்னடைவு.

இந்தச் சமயத்தில்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு புத்தெழுச்சி ஊட்டி, புது இரத்தம் செலுத்துவதற்கு கட்சியின் பதவி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மட்டும் போதாது, கட்சியின் தலைமைத்துவம் தொடக்கம் அனைத்து மட்டப் பதவி நிலைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என நவீன் திஸநாயக்கா தெரிவித்திருக்கின்றார். ஆனால் அதில் அவர் வெற்றியடைவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனாலும் அவர் சுட்டிக்காட்டும் இன்னொரு விவகாரம் கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

"நாட்டில் தற்போது சிறந்த அரசாங்கமும் கிடையாது. பலமான எதிர்க்கட்சியும் கிடையாது." – என்று அவர் கூறும் கருத்து மிகவும் சரியானதுதான்.

மிகப் பலமான அரசைத்தான் இலங்கை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அந்தப் பலத்தைப் பயன்படுத்தி நெறிமுறையான – முன்னேற்றகரமாக – திருப்தியான – ஆட்சியைத் தருவதாக இந்த அரசாங்கம் செயற்படவில்லை. அதேசமயம் அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டி, தட்டிக் கேட்டு, மாற்றுத் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் கட்டமைப்பில் எதிர்க்கட்சியும் செயற்படவில்லை.

ஆனாலும் இவற்றுக்கு மாற்றாக அமையக் கூடியதாக ஐ.தே. கட்சியும் இல்லவே இல்லை என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.

# மதத் தலைவர்களின் ஆசியோடு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவேன்!

## யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உறுதி



மதத் தலைவர்களின் ஆசியோடு யாழில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளார் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்

நேற்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர், பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

1985 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் கடமையாற்றியிருக்கிறேன் நான் கடைசியாக 2014, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீரிமலை உடுவில் பகுதிகளில் கடமையாற்றியிருந்தேன்.

அந்தக் காலப்பகுதியில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கான வீடுகளை பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்காற்றியிருந்தேன். அத்தோடு விவசாய மக்களுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்திய பாதீன ஒழிப்பில் நான் முக்கிய பங்காற்றியிருந்தேன்.

அதன் பின்னர் வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு பின்னர் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு கடந்த ஒருவாரமாகிறது. எனினும் யாழ் மாவட்டம் தொடர்பாக ஏற்கனவே நான் அறிந்தவன். இங்குள்ள மக்களை நன்கு அறிந்தவன்.

எனவே இங்குள்ள மதத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து அவர்களின் கருத்தின் ஊடாக ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி மாவட்டத்தில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவேன்.

மேலும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு என்னாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்.

அத்தோடு எனது கீழ் பணியாற்றும் சகல இராணுவ வீரர்களும் பொதுமக்களின் சகல சமூக செயற்பாட்டிற்கும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். – என்றும் தெரிவித்தார்.

# இலங்கையில் நேற்றும் ஒரே நாளில் அதிகளவான நோயாளர் குணமடைவு!

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து நேற்று ஆயிரத்து 869 குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றுக்கு பதிவாகிய அதிகபட்ச எண்ணிக்கை என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த (புதன்கிழமை) அதிகளவிலான அதாவது 1,520 பேர் குணமடைந்தமையே அதிக எண்ணிக்கையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 435 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 969 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 781 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 290 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதாக கண்டி மாநகரம் மாற்றமடையுமாம்

பேராதனை தாவரவியல் பூங்காவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முக்கிய இடமாக மாற்றப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கண்டி நகரத்துக்கு வெளிநாட்டினரை ஈர்க்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் கூறினார்.

மேலும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பயணத்திட்டத்தை உருவாக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

# மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு ஐ.நாவில் பிரித்தானியாவும் ஆதரவு வழங்குமாம்!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து செயற்படத் தயாராக இருப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதி ஜூலியன் பிரத்வைட், இலங்கை தொடர்பான புதிய ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கையையும் இங்கிலாந்து பரிசீலிக்கும் என கூறியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் சமர்ப்பிக்கவிருக்கும் 16 பக்கங்கள் கொண்ட முழுமையான அறிக்கை வெளியான நிலையில் இதுகுறித்து டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில்-இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்டிருக்கும் மிக முக்கியமான புதிய அறிக்கை தொடர்பாக நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம்.

எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் மனித உரிமைகளை



யும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி பிரித்தானியா ஆதரவு வழங்கும் என பதிவிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் புதிய அறிக்கையில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இதனை அமுல்படுத்துவதற்கு இலங்கை தவறும் பட்சத்தில், மாற்று யோசனைகளை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அபுதாபி பட்டத்து இளவரசருடன் பிரதமர் மோடி இருதரப்பு உறவு குறித்து தொலைபேசியில் பேச்சு

அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் நேற்று தொலைபேசியில் உரையாடினர். அப்போது அபுதாபி பட்டத்து இளவரசர் இருதரப்பு உறவுகள் குறித்து மோடியிடம் விவாதித்தார். மேலும் இந்த உரையாடலில் பல்வேறு பிரதேச அளவிலான பிரச்சினைகள், சர்வதேச அளவிலான பொதுவான பிரச்சினைகள் தொடர்பாகப் பேசப்பட்டன.

குறிப்பாக இருநாடுகளில் இருந்து வரும் கொரோனா பரவல் தொற்று மற்றும் அதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக பேசினர். அமீரகம் – இந்தியா இடையே கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதித்தனர்.

அதேபோல குடியரசு தினத்திற்காக அபுதாபி பட்டத்து இளவரசர் இந்திய பிரதமருக்கு வாழ்த்துக்களை தெரி



வித்தார். முக்கியமாக அபுதாபி பட்டத்து இளவரசர் எமிரேட்ஸில் இருந்துவரும் இந்தியர்களுடனான உறவுமுறைகள் பல்துறைகளில் அவர்கள் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவ பற்றி எடுத்துரைத்தார்.

இருநாடுகளுக்கு இடையே பொருளாதாரம், வர்த்தகம், தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் இன்னும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர்.

இந்த தொலைபேசி உரையாடல் குறித்து நேற்று இந்தியப் பிரதமர் மோடி டுவிட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டார். அதில், “எனது நண்பர் அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் அன்பான தொலைபேசி உரையாடலை நிகழ்த்தினார்.

அவர் எமிரேட்ஸில் இந்தியர்களின் நல்வாழ்வில் தனிப்பட்ட கவனம் செலுத்தி வருவதற்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இருநாட்டு ஒத்துழைப்பில் தொற்று நோய் பரவலில் கூட எந்தவித தொய்வும் ஏற்படவில்லை. எங்களது உறவுகளை மேம்படுத்தவும், பன்முகப்படுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# விவசாயிகள் தொடர் போராட்டம்; டெல்லி எல்லைகள் மீண்டும் மூடல்



வேளாண் சட்டங்களை திரும்ப பெற வலியுறுத்தி விவசாயிகள் 2 மாதங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் தொடர்ந்து தோல்வியை சந்தித்த சூழலில், குடியரசு தினத்தன்று டெல்லிக்குள் டிராக்டர் பேரணி நடத்தினர். இதில் கடும் வன்முறை வெடித்தது.

விவசாயிகளில் ஒரு தரப்பினர் பொலிஸாரால் அனுமதிக்கப்பட்ட பாதைகளை மீறி தடுப்புகளை உடைத்து கொண்டு முன்னேறினர். அதன்பின்னர் விவசாயிகள் தங்கள் அமைப்பின் கொடியை செங்கோட்டையில் ஏற்றினர். இதில், பொலிஸாருக்கும், விவசாயிகளுக்கும் இடையே தள்ளுமுள்ளு மற்றும் மோதல் ஏற்பட்டது. டெல்லியில் விவசாயிகளின் டிராக்டர் பேரணியில், ஒருவர் உயிரிழந்துள்ளார். வன்முறை தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டெல்லியில் டிராக்டர் பேரணியை முடித்துக் கொண்டு திரும்பிய விவசாயிகள், அவர்கள் ஏற்கனவே போராட்டம் நடத்திய எல்லைப் பகுதிகளில் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியமையால் எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளின் போராட்டம் காரணமாக காசிப்பூர், சிங்கு, ஆச்சந்தி, மங்கேஷ், சபோலி, பியாவ் மன்யாரி எல்லைகள் மூடப்பட்டன. போராட்டத்தில் வன்முறை ஏற்படாமல் தடுப்பதற்காக பொலிஸார் அதிக அளவில் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு பணிகளுக்காக குவிக்கப்பட்டு இருந்தனர்.

# பிரிட்டன் விமானங்களுக்கான தடை பெப்ரவரி 14ஆம் திகதி வரை நீடிப்பு

## விமானப் போக்குவரத்துத்துறை தெரிவிப்பு



உருமாறிய கொரோனா தொற்றுப் பரவலின் காரணமாக பிரிட்டன் விமானங்களுக்கான தடையை பெப்ரவரி 14ஆம் திகதி வரை நீடித்து விமானப் போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது.

புதிய வகை கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா – பிரிட்டனுக்கு இடையே விமானச் சேவைக்குத் தடை விதிக்கப்பட்டது.

ஜனவரி 6ஆம் திகதி இரு நாடுகளுக்கும் இடையே விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. பிரிட்டனிலிருந்து வந்த பயணிக்கு புதிய வகை கொரோனாத் தொற்று உறுதியானமையால் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

# இந்தியாவை நாங்கள் நம்புகிறோம் ஐ.நா. பொதுச்செயலாளர் தெரிவிப்பு



இந்தியாவில் கொவிஷீல்டு, கொவேக்சின் ஆகிய 2 கொரோனா தடுப்பூசிகளின் அவசர கால பயன்பாட்டுக்கு இந்திய தலைமை மருந்து கட்டுப்பாட்டு மையம் கடந்த மாதம் 3 ஆம் திகதி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த தடுப்பூசிகளை போடும் மிகப்பெரிய பணி இந்தியாவில் தொடங்கியுள்ள நிலையில் உலகின் பல நாடுகள், இந்தியாவின் தடுப்பூசிகளுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் தென்னாபிரிக்காவில் கொரோனாவைத் தடுத்து நிறுத்துவதற்காக இந்தியா 10 லட்சம் தடுப்பூசி டோஸ்களை அனுப்பி வைக்கிறது.

இந்நிலையில், வெளிநாடுகளுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றுமதி செய்வதையொட்டி ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குடரெஸ் கூறியதாவது:

இந்தியாவின் கொரோனா (தடுப்பூசி) உற்பத்தித் திறன் இன்று உலகில் உள்ள மிகச் சிறந்த சொத்தாக நாங்கள் கருதுகிறோம்.

உலகளாவிய தடுப்பூசி பிரசாரம் சாத்தியமா என்பதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இந்தியாவில் இருக்கும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்றார்.

# உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு இந்திய அரசு கட்டுப்படும் விவசாய சட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி தெரிவிப்பு



பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று நாடாளுமன்ற கூட்டுக் கூடத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். அவர் பேசியதாவது:-

விவசாய சட்டங்கள் விடயத்தில் உச்ச நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்புக்கு மத்திய அரசு கட்டுப்படும். விவசாய சட்டங்கள் தொடர்பான சில முரண்பாடான தகவல்களை நீக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

விரிவான விவாதங்களுக்கு பின்பு நாடாளுமன்றத்தில் 3 விவசாய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மூன்று சட்டங்களை உருவாக்குவதற்கு முன்னர் கிடைத்த உரிமைகள் மற்றும் வசதிகள் குறைக்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். உண்மையில் இந்த புதிய விவசாய சீர்திருத்தங்களுடன் அரசாங்கம் விவசாயிகளுக்கு புதிய வசதிகளையும் உரிமைகளையும் வழங்கியுள்ளது.

விவசாயிகளின் விளைபொருள்களுக்கு உரிய விலையை உறுதி செய்வதே அரசின் கொள்கை ஆகும். மத்திய அரசு கொண்டு வந்த பயிர் காப்பீட்டு திட்டங்கள் மூலம் சிறு, குறு விவசாயிகள் பெரும் பலன் அடைந்துள்ளனர்.

விவசாயிகள் சமீபத்தில் ஒரு டிராக்டர் பேரணியை நடத்தினர். போராட்டங்களின் போது வன்முறை ஏற்பட்டது மற்றும் செங்கோட்டையில் தேசியக் கொடியை அவமதித்த சம்பவங்கள் நடந்தன. இது மிகவும் துரதிஷ்டவசமானது.

நாடு முழுவதும் 22 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகளை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. 3 ஆம் பாலினத்தோருக்கு சம உரிமைகள் அளிப்பதற்காக, பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கொரோனாத் தடுப்பூசியில் இந்தியா முன்னிலையில் இருப்பதை உலகமே பாராட்டுகிறது. தூத்துக்குடி – ராமநாதபுரம் இடையிலான கேஸ் பைப் லைன் அமைக்கும் பணி விரைவாக நடக்கிறது. – இவ்வாறு அவர் பேசினார்.

# நாடாளுமன்றத்தை முடக்கிய எதிர்க்கட்சிகள்; திங்கள் வரை ஒத்திவைப்பு

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால் மக்களவை, மாநிலங்களவை கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். ஜனாதிபதி உரையை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடி வரும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி உரையை புறக்கணித்தன.

ஜனாதிபதி உரை நிகழ்த்தி முடித்ததும் அவைக்கு வந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேளாண் சட்டங்களுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

அமளிக்கு மத்தியிலும், நிதித்துறை மந்திரி நிர்மலா சீதாராமன், பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்தார். அதன்பின்னரும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி நீடித்தமையால்சபையை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

சபை நடவடிக்கை முடங்கியது. இதையடுத்து திங்கட்கிழமை காலை 11 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.



# சமரசம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை சீனா தொடர்பில் அமெரிக்கா திட்டவட்டம்

அமெரிக்காவில் ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோது, சீனாவுடன் மோதல் போக்கு ஏற்படத்தொடங்கியது. அமெரிக்காவின் இரகசியங்களையும், அறிவு சார் சொத்துக்களையும் சீனா திருடுவதாக குற்றம்சாட்டி, அந்த நாட்டின்மீது வர்த்தகப் போரை அமெரிக்கா ஆரம்பித்தது. சீனப் பொருள்கள் மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்தது. பதிலடியாக இதேபோன்ற நடவடிக்கையை சீனாவும் மேற்கொண்டது. அமெரிக்கப் பொருள்கள் மீது சீனா கூடுதல் வரி விதித்தது. இதனால் வர்த்தகப் போர் இன்று வரை தொடர்கிறது.

கொரோனா வைரஸ் தோற்றம், பரவல் பற்றிய உண்மையான தகவல்களை சீனா வெளியிடாமல் மறைத்து விட்டது. இதில் உலக சுகாதார நிறுவனமும் துணை போய் இருக்கிறது என்று அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வந்தது. அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையேயான உறவு இதுவரை இல்லாத அளவுக்கு மோசமான நிலையில் உள்ளது. இப்போது பருவநிலை மாற்றம், மிகப்பெரிய பிரச்சினையாக பூதாகரமாகி வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தில் முன்னாள் வெளியுறவு மந்திரி ஜோன் கெர்ரி பருவநிலை மாற்றம் தொடர்பான சிறப்பு தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் முதன்முதலாக நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் சீனாவுடனான உறவு பற்றிய திட்டவட்டமாக கருத்துக்களை வெளியிட்டார். அவர் கூறியதாவது:–

சில முக்கிய விடயங்களில் சீனாவுடன் அமெரிக்கா கடுமையான வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவு மந்திரியாகவும், செனட் உறுப்பினராகவும் பணியாற்றிய நிலையில், அமெரிக்காவின் அறிவு சார் சொத்துக்களை சீனா திருடுவதுபற்றியும், தென் சீனக்கடல் விவகாரம் குறித்தும் நான் தெரிந்து வைத்திருக்கிறேன். நாம் எல்லோருமே இதை அறிந்திருக்கிறோம். பருவநிலை மாற்றம் தொடர்பான எந்த ஒன்றுக்காகவும், இதையெல்லாம் மாற்றப்போவதில்லை. பருவ நிலை மாற்ற பிரச்சினையில் உடன்பாடு ஏற்படுவதற்காக சீனாவுடன் அமெரிக்கா எந்த சமரசமும் செய்து கொள்ளப்போவதில்லை.

ஆனால், பருவநிலை மாற்றம், மிக முக்கியமான பிரச்சினை ஆகும். இதில்



உலகின் 30 சதவீத கார்பன் கழிவுகளை சீனா வெளியிடுகிறது. அமெரிக்கா 15 சதவீத கார்பன் கழிவுகளை மட்டுமே வெளியிடுகிறது. ஐரோப்பிய கூட்டமைப்புடன் சேரும்போது முத்தரப்பும் சேர்த்து 55 சதவீதத்துக்கும் அதிகமான கார்பன் கழிவுகளை வெளியிடுகின்றன.

எனவே நாம் முன்னேறுவதற்கு ஒரு வழியை கண்டுபிடிப்பது அவசரம் ஆகும். நாம் காத்திருந்து பார்ப்போம்.

ஆனால், சீனாவுடனான ஏனைய பிரச்சி னைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து ஜோ பைடன் மிகத் தெளிவாக இருக்கிறார். இதில் சிலர் கவலைப்பட்டது எனக்கு தெரியும். ஒன்றுக்காக மற்றொன்றை செய்து விட முடியாது.

பருவநிலை மாற்றத்தை பொறுத்த மட்டில் அது உலகுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. பருவநிலை மாற்றத்துக்கான பிரச்சினைகள் இப்போது இருப்பதை விட அதிகமாக இருக்க முடியாது. அது இருந்துகொண்டுதான் இருக்கிறது. நாம் இந்த வார்த்தைகளை எளிதாக பயன்படுத்துகிறோம். பின் விட்டுவிடுகிறோம். ஆனால் உலகளாவிய ஒரு பிரச்சினைக்கு முன்பாக நாம் மிகப்பெரிய செயற்றிட்டத்தை வைத்திருக்கிறோம். இந்த பிரச்சினையை ஜோ பைடன் முற்றிலும் அறிந்து வைத்திருக்கிறார். எனவே பருவநிலை மாற்றத்துக்கான பாரிஸ் உடன்படிக்கையில் நாம் மீண்டும் இணைவதற்கான நிர்வாக உத்தரவில் அவர் கையெழுத்து இட்டிருக்கிறார். இவ்வளவு விரைவாக அதில் அவர் இணைவதில் காரணம் இருக்கிறது. இது அவசரமான பிரச்சினை ஆகும்.

நவம்பர் மாதம் கிளாஸ்கோவில் நடைபெறுகின்ற பருவநிலை மாற்ற உச்சி மாநாடுதான், உலகின் மிக மோசமான சுற் றுச்சூழல் விளைவுகளை முறிடியப்பதற்கு கடைசி சிறந்த வாய்ப்பாக அமையும்.– இவ்வாறு அவர் கூறினார்.

# சவப்பெட்டியில் படுத்து புதிய வகை வழிபாடு; தாய்லாந்து புத்த கோயிலுக்கு குவியும் பக்தர்கள்



தாய்லாந்து நாட்டில் உள்ள வாட் பங்னா நாய் எனும் புத்த கோயிலில் உள்ள சவப்பெட்டியில் படுத்து மக்கள் விநோத வழிபாடு செய்து வருகின்றனர்.

தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொங்கின் புறநகர்ப் பகுதியில் உள்ளது வாட் பங்னா நாய் எனும் புத்த கோயில். இங்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழக்கம். இந்த கோயிலுக்கு வரும் பக்தர்கள் விநோதமான வழிபாடு ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

அது என்னவென்றால், இந்த ஆலயத்தில் காலி சவப்பெட்டிகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு வரும் பக்தர்கள் கையில் பூ கொத்துடன் இந்த சவப்பெட்டிக்குள் இறங்கி மேற்கு நோக்கி தலையை வைத்துப் படுக்கின்றனர். அதன் பின் அந்த சவப்பெட்டியை வெள்ளைத் துணியால் மூடிவிடுகின்றனர். பின்னர், வெளியில் அமர்ந்திருக்கும் துறவிகள் மந்திரங்களை ஓத, சவப்பெட்டிக்குள் இருக்கும் பக்தர்கள் தீவிர பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். அதன் பிறகு பக்தர்கள் எழுந்து மீண்டும் கிழக்கு நோக்கித் தலையை வைத்துப் படுத்து பிரார்த்தனையில் ஈடுபடுகிறார்கள்.

இவ்வாறு மேற்கு, கிழக்கு என்று திசை மாறிப் படுப்பது மறுபிறவியைக் குறிக்கிறது என்றும் இவ்வாறு வழிபாடு செய்வதனால் புதிதாகப் பிறக்கிறோம் என்று பக்தர்கள் நம்புகின்றனர். மேலும், வறுமை நீங்கி, செல்வச் செழிப்போடு வாழலாம் என்றும் நம்பப்படுகிறது. கொரோனா நோய்த் தொற்றினால் பலரும் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நிலையில், நம்பிக்கையுடன் பலரும் இந்த கோயிலுக்கு வந்து வழிபாடு செய்து செல்கின்றனர்.

தாய்லாந்து சமூக வலைத்தளங்களில் இந்த வழிபாட்டு முறை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்தபோதும், சவப்பெட்டி வழிபாட்டிற்கான பிரபல்யம் சிறிதும் குறையவில்லை .

இந்த வழிபாடு குறித்து வாட் பங்னா நாய் கோயிலின் துறவி ஒருவர் கூறுகையில், மரணம் என்பது மனித வாழ்க்கையில் நிச்சயமான ஒன்று, எனவே வாழும் வாழ்க்கையில் கவனம் செலுத்தி முறையாக வாழ வேண்டும் என்பதன் தாத்பரியமாகவே இந்த வழிபாடு செய்யப்படுவதாகக் கூறியுள்ளார். பக்தர்கள் சவப்பெட்டிக்குள் இறங்கி ஏறினால் வாழ்வில் அதிர்ஷ்டம் அதிகரிக்கும் என்று கூறுகின்றனர்.

**வளர்ப்பு மகள் மீது**

# 105 முறை பாலியல் வன்கொடுமை 1,050 ஆண்டு சிறைத் தண்டனை

மலேசியாவில் வளர்ப்பு மகளிடம் இரண்டு ஆண்டுகளாக பாலியல் வன்முறையில் ஈடுபட்ட நபருக்கு 1,050 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 24 பிரம்படிகளும் தண்டனையாக விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளார் மலேசியத் தமிழ்ப் பெண் நீதிபதி குணசுந்தரி.

பெற்றோர் கடந்த 2015 ஆம் ஆண்டு விவாகரத்து பெற்று பிரிந்துவிட்டனர். கணவரிடமிருந்து விவாகரத்து பெற்ற பெண் 2016 ஆம் ஆண்டு வேறு ஒரு நபரைத் திருமணம் செய்துகொண்டார். அந்தப் பெண் தன் பெண் குழந்தையுடன் புதிதாகத் திருமணமான நபருடன் வசித்து வந்த நிலையில், அந்த நபர் வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார். அப்போது, தான் பெற்ற மகளாகப் பார்க்க வேண்டிய தனது மனைவியின் குழந்தையிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். 12 வயது வளர்ப்பு மகளிடம் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி தொடங்கி 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி வரை சுமார் 105 முறை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளார்.

இது குறித்து யாரிடமும் சொல்லக்கூடாது என்று அந்த சிறுமியை மிரட்டியும் கடுமையாக அடித்தும் உள்ளார். இந்த சூழலில் அந்த சிறுமிக்குத் திடீரென்று உடல்நிலை பாதிக்கப்பட, அந்த சிறுமியின் அத்தை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது, அந்த சிறுமி தன் அத்தையிடம் தனக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி கண்ணீருடன் கூறியுள்ளார். இதையடுத்து, அந்த சிறுமியின் தாயும் அத்தையும் பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளனர்.

இதுகுறித்த வழக்கு விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவருக்கு கடுங்காவல் தண்டனையும் மிக அதிகபட்ச பிரம்படிகளும் வழங்கவேண்டும் என்று அரசுத் தரப்பில் வாதாடப்பட்டது. இந்த வழக்கு விசாரணை முடிவில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 1,050 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 24 பிரம்படிகளும் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கிய பெண் நீதிபதியான குணசுந்தரி மலேசிய வாழ் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொது முடக்கத்துக்கு எதிராகப் போராட்டம் அரசாங்க கட்டடத்திற்கு தீ வைப்பு!

**லெபனான் நாட்டில் பரபரப்பு**

லெபனான் நாட்டில் பொதுமுடக்கத்துக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் அரசாங்க கட்டடத்திற்கு தீ வைக்கப்பட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது.

Tripoli பகுதியில் பொதுமுடக்கத்துக்கு எதிராகத் தொடர்ந்து நான்காவது நாளாக நடைபெற்ற போராட்டம், அங்குள்ள அரசாங்க கட்டடத்திற்கு தீ வைக்கப்பட்டமையின் மூலம் கலவரமாக வெடித்தது.

இதனையடுத்து கலவரத்தைத் தடுக்கும் வகையில் களமிறங்கிய பாதுகாப்பு படையினர், கண்ணீர் புகை குண்டு வீசியும், ரப்பர் தோட்டாக்களை பயன்படுத்தியும் கலவரத்தில் ஈடுபட்டவர்களை விரட்டியடித்தனர்.



# வடகொரிய தலைவரின் சகோதரரின் கொலை அசாசின்ஸ் என்ற திரைப்படமாக வெளியீடு

வடகொரியாவின் தலைவரின் சகோதரரான கிம்ஜாங் நம் கொலைசெய்யப்பட்டு நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தயாரிக்கப்பட்டுள்ள இந்த புதிய ஆவணப்படம், அந்தக் கொலை மற்றும் அதன் பின்னணியில் இருந்த இரண்டு இளம் பெண்களைக் குறித்த மூடுதிரைகளை விலக்குகிறது.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் கிம் கொல்லப்படும் காட்சி அங்குள்ள கண்காணிப்பு கமராவில் பதிவாகியது.

உலகம் முழுவதுமே அந்த வீடியோவைப் பார்த்துவிட்டபோதும் இன்னும் துலங்காத மர்மங்கள் உள்ளன.

அமெரிக்க இயக்குனர் ரையன் வைட் இரண்டரை ஆண்டுகள் இந்த வழக்கை ஆய்வு செய்து அசாசின்ஸ் என்ற இந்தப் படத்தை இயக்கியுள்ளார்.

இத்திரைப்படம் இன்று வெளியாகிறது. அவர் முகத்தில் விஷம் பூசிக் கொன்றதாக அந்த இரண்டு பெண்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படலாம் என இருந்த நிலையில் 2019 இல் அவர்கள் மீதான வழக்கில் திடீர் திருப்பமாக இந்தோனேசிய பெண்ணை விடுதலை செய்த அதேநேரம் குற்றத்தை ஒப்புக்கொண்ட வியட்நாம் பெண்ணுக்கு 3 வருடம் 4 மாத சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது.

அது வெறும் பிராங்க் ஷோ என நினைத்து செய்ததாக அந்தப் பெண்கள் தங்கள் தரப்பை வாதாடி வருகின்றனர். இத்திரைப்படம் அந்தப் பெண்களை ஆவணப்படுத்தியுள்ளது.

### ஐ. நா. அறிக்கை ஒருதலைப்பட்சமானது:

# தமிழ் மக்களை அரசு புறக்கணிப்பதாக கூறுகின்றமையை ஏற்க முடியாதாம்!

## சரத் வீரசேகர இப்படி வியாக்கியானம்



இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒருதலைப்பட்சமானது.

தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணிப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இல்லாத பிரச்சினைகளை இருப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் சர்வதேச அரங்கில் இலாபமடைகிறார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை நாட்டின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஒருதலைப்பட்சமான கொள்கை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்து செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது. 2019 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த அரசாங்கம் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை.

அனைத்துஇனமக்களுக்கும்அனைத்து நிலைகளிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கம் இன நல்லிணக்கம் என்று செய்த தவறுகளைத் திருத்தும் போது அதனை இன புறக்கணிப்பு என்று கருதுகின்றமை தவறான நிலைப்பாடாகும்.

30 வருட கால சிவில் யுத்தம் முடிவடைந்த பிறகு அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தியது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன எனக் குற்றஞ்சாட்டப்பட்டன. சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணை நடவடிக்கைகள் அந்தக் காலக்கட்டத்தில் உள்ளக பொறிமுறை ஊடாக முன்னெடுக்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆட்சி மாற்றத்துக்கு மேற்குலக நாடுகள் பாரிய பங்களிப்புச் செய்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக 30/1 பிரேரணை கொண்டு வரப்பட்டது. 30/1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் இலங்கையின் அரசமைப்பிற்கும்,

சுயாதீனத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிந்தும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பிரேரணைக்கு இணையனுசரணை வழங்குவதாகத் தனது தனிப்பட்ட விருப்பத்தை அரசாங்கத்தின் தீர்மானமாகத் தெரிவித்தார். இதன் தாக்கம் இன்றும் தொடர்கிறது. - என சரத் வீரசேகர மேலும் தெரிவித்தார்.

## யாழ்.வணிகர் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பண நிகழ்வு!



யாழ்.வணிகர் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம் நிகழ்வு தைப்பூச தினமான நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாண வணிகர் கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் வணிக கழகத்தின் தலைவர் ஆ.ஜெயசேகரன் மற்றும் உப தலைவரால் இந்த இணையத்தளம்வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். வணிகர் கழக இணையத்தளத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களின் விவரங்கள், சுற்றுலா மையங்கள், தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய வர்த்தக துறை சார்ந்த அனைத்து தகவல்களையும் இணையத்தளத்தின் ஊடாக இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் மக்கள் இலகுவாக இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு இந்த வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் கழகத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றப் பணியாளர்களுக்கு எழுமாறாகப் பி.சி.ஆர். சோதனை!

நாடாளுமன்ற வளாகத்தில் வாரத்துக்கு ஒருதடவை நாடாளுமன்றப் பணியாளர்களை எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பரிசோதனைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றோம் என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட உள்ள பி.சி. ஆர். பரிசோதனை தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் காலப் பகுதியிலும், அமர்வுகள் இடம்பெறாத காலப் பகுதியிலும் வாரத்துக்கு ஒரு தடவை நாடாளுமன்றப் பணியாளர்களை எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பரிசோதனைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றோம்.

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக அறியக்கிடைத்த பின்னர் அவருடன் சிறிது நேரம் தொடர்பில் இருந்தார் எனக் கூறப்படும் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி தானாக முன்வந்து பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு உட்பட்டமையுடன், இவற்றில் தொற்று ஏற்படவில்லையென்பதை உறுதிப்படுத்தும் வைத்திய அறிக்கை படைக்கல சேவிதரிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது.

2021 ஜனவரி மாதம் 13 ஆம் திகதி முதல் இதுவரை நாடாளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் இறுதியாக 2021.01.25 ஆம் திகதி 190 பேர் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமையுடன் இதில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது.

## 9 மாத குழந்தை உட்பட 4 பேருக்கு கிண்ணியா, காக்காமுனையில் தொற்று

கிண்ணியா - காக்கா முனைப் பகுதியில் 9 மாத குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக குறிஞ்சாங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை நீதிமன்றத்தில் கடமையாற்றி வரும் நபர் ஒருவரின் குடும்பத்தினருக்கு நேற்று (வியாழக்கிழமை) பெறப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிண்ணியா பிரதேசத்தில் தொடர்ச்சியாக மக்களை தெளிவூட்டி வருவதுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாகவும் ஒவ்வொரு சங்கங்களின் ஊடாகத் தமது கிராமங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் அறிவுறுத்தல்களையும் அறிவூட்டல்களையும் வழங்கிவருவதாக குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம். எம்.அஜித் தெரிவித்தார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1992.11.18 | பிறந்த திகதி - 1983.03.17 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பூரம் | நட்சத்திரம் - அச்சுவினி |
| செவ் - 2 இல் | சூ/செவ் - 9 இல் |
| பாவம் - 61 3/4 | பாவம் - 19 3/4 |
| கல்வி - A/L | கல்வி - பட்டதாரி |
| தொழில் - சுவிஸ் PR | தொழில் - விரிவுரையாளர் ஜமேக்கா |
| எதிர்பார்ப்பு - சுவிஸ் வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - ஜமேக்கா வரவிரும்பும் பட்டதாரி மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2021இல் வெளியிடப்பெற்றது.